# <u>பெண்கள் ஐக்கிய சங்கம்</u>

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் C.S.I கிறிஸ்து நாதர் ஆலயம் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பாக அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

## <u>பெண்கள் ஐக்கிய சங்க தலைவிகள்</u>

| | | | |
|---|---|---|---|
| திருமதி - | ஜெபஜோதி ஜாண் குனசீலன் | - | தலைவர் |
| திருமதி - | ஹேனா ஆஸ்டின் | - | உதவி தலைவர் |
| திருமதி - | பியுலா ஆன்ரூ | - | செயலாளர் |
| திருமதி - | செல்வி டேனியல் | - | கன்வீனர் |
| திருமதி - | பியுலா டேனியல் | - | பொருளாளர் |

1) <u>மேற்கண்ட சகோதரிகள் பெண்கள் சங்கத்தின் பொருப்பேற்று மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர்.</u>

1) மிஷினரி தாங்குதல்

2) ஏழை விதவைகளுக்கு உதவித் தொகை வழங்குதல்

3) மருத்துவ உதவித் தொகை

4) கல்வி உதவித் தொகை

5) வீடுகளில் ஜெபக் கூட்டம்

6) ஏழை எளிய மக்களுக்கு அரிசி 10kg பை வழங்குதல்

7) திருமண வீட்டிற்கு சென்று சிறப்பு ஜெபம் செய்தி கொடுத்து பிள்ளைகளை வாழ்த்தி பரிசாக பாடல் புத்தகம் வழங்குதல்

8) சுகவீனமானவர்களை வீடுகளில் அல்லது மருத்துவமனையில் சென்று பார்த்து ஜெபித்து வருதல்

9) கவுன்சிலிங் கொடுத்து ஜெபிப்பது (திங்கள் முதல் சனி வரை காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை)

10) தையல் மிஷின் ஏழை பிள்ளைகளுக்கு வழங்குதல்

## 2) ஜெபக் கூட்டங்கள்

1) மாதத்தின் முதல் புதன் கிழமை காலை 10.30 மணி முதல் பகல் 12:30 மணி வரை உபவாசக் கூட்டம நடைபெறும்.

2) எல்லா சனிக்கிழமைகளிலும் மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை கூட்டம் நடைபெறும்.

3) நான்காம் ஞாயிறு பகல் 11 மணி முதல் 12:30 மணி வரை சிறப்பு கூட்டம் நடைபெறும்.

## 3) சிறப்புக் கூட்டங்கள்

1) லெந்து காலங்களில் 7 புதன் கிழமைகளிலும் சிறப்பு உபவாசக் கூட்டங்கள் நடைபெறும். அந்த நாட்களில் சிறப்புச் செய்தியாளர்களை கொண்டு தேவ செய்தி வழங்கப்படும்.

2) வருடத்தில் ஒரு நாள் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் ஒடுக்கக் கூட்டம் நடைபெறும்.

3) பெண்கள் ஞாயிறு மங்கள வாக்கு திருநாள் அனுசரிக்கப்படுகிறது கடந்த ஆண்டு ஒரு நாள் ஒடுக்கக் கூட்டம் அன்று 2017. திருமதி நளினி வில்சன் (வினியார்ட் ஊழியங்கள்) சென்னை அவர்களால் சிறப்பு செய்தி வழங்கப்பட்டது கூட்டம் மிகவும் ஆசிர்வாதமாக இருந்தது.

4) 2017 – பெண்கள் ஐக்கிய சங்கத்திற்கு என்று புதிய பாடல் புத்தகம் வெளியிடப்பட்டது.

## 1) பெண்கள் ஐக்கிய சங்கத்தின் மிகச் சிறப்பான பணிகள்

லெந்து காலங்களில் பிடி அரிசி பை - யை சபை மக்களிடம் கொடுத்து அதில் அரிசி நிரப்பி பெரிய வெள்ளி கிழமை ஆலயத்தில் படைக்கின்றனர். அந்த அரிசி 50kg பைகளில் நிரப்பி கோவை மாவட்டத்திலுள்ள அனாதை இல்லங்கள் முதியோர் இல்லங்கள் C.S.I யின் மூலமாக செயல்படுகின்ற இல்லங்களுக்கும் வினியோகப்படுகிறது.

2) <u>கவுன்சிலிங் ஜெபம்</u>

1) ஆலயத்தின் எதிரே அரசு மருத்துவமனை இயங்குவதால் அங்கிருந்து அநேகர் ஜெப உதவியை நாடி வருகின்றனர். அவர்களுக்கு மற்றும் அநேக புற ஜாதி மக்களும் எங்கே விடுதலை கிடைக்கும் என்று ஏக்கத்தோடு வருகிறவர்களுக்கு பல விதமான பிரச்சினையில் தத்தலிப்போடு என் வாழ்க்கையில் ஒளி வீசாதா என்று வருகிறவர்களுக்கும் வேதத்திலிருந்து வசனத்தை கூறி ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது. அநேகர் ஆத்துமா இரட்சிப்பு சரீர சுகப்பெற்று தேவனுடைய பிள்ளைகளாக மாறி பிரகாசமான வாழ்க்கையாக மாறி நமது ஆலயத்தில் புதிய அங்கத்தினர்களாகவும் சேர்ந்திருக்கிறார்கள். இந்த ஊழியம் மிகவும் உன்னதமான பணி இந்தப் பணியில் தனினார்வ பணியாளர்களாக பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சகோதரிகள் செயல்படுகின்றனர்.

2) I.M.S மூலமாக நடைபெறும் விற்பனை விழா அனைத்து மிஷினெரிகளில் விற்பனை மற்றும் வருடாந்திர அறுப்பின் பண்டிகை ஆகிய விற்பனை விழாக்களுக்கு பெண்கள் ஐக்கிய சங்கம் வசூல் செய்து சபையோடு இனைந்து செயல்பட்டு சிற்ப்பான பங்கை வசூலிக்கிறது.

3) <u>சுற்றுலா</u>

வருடத்திற்கு ஒருமுறை பெண்கள் ஐக்கிய சங்கத்தின் மூலமாக சுற்றுலாவிற்கு அழைத்து செல்லபடுகிறார்கள். 2016-ல் ஜுன் மாதத்தில் 46 பேர் கொண்ட குழுவினர் தமிழ்நாட்டில் தரங்கம்பாடி என்ற இடத்திற்கு சென்று வந்தோம். ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் மிகவும் பிரயோஜனமாக அமைந்தது. மிஷனரி சீகன் பாலக் அவர்கள் மூலமாக முதல் வேதாகமம் அச்சிடப்பட்டதையும் பார்த்து வந்தோம். அந்த ஆலயத்தின் குருவானவர் சிறப்பு ஆராதனையை நடத்தினார். அதில் கலந்து கொண்டு தேவ ஆசிர்வாதம் பெற்று வந்தது மறக்க முடியாது.

2017-ல் ஜுன் மாதம் 50 பேர் கொண்ட குழுவினர் டோனாவூர் மற்றும் கன்னியாகுமரிக்கு சுற்றுலா சென்று வந்தோம். டோனாவூர் மிஷனரி அவர்களால் கட்டபட்ட ஆலயம் மிஷனரி எமி கார்மைக்கெல் அம்மையாரின் வாழ்க்கை சரித்திரம் பாராட்டத்தக்கது. அவர்களால் மிகுந்த கரிசனையோடு கட்டப்பட்டு இன்றும் செயல்பட்டு வருகின்ற மருத்துவமனை மிஷனரி பிள்ளைகள் தங்கி படிக்கும் விடுதி ஏழை எளிய மக்களுக்கு குறிப்பாக பெண் பிள்ளைகளுக்கு வாழ்க்கை மேம்பாட்டுக்கு சிறுதொழில் மற்றும்

மேற்கல்விக்கு வேண்டிய உதவிகள் செய்து வருகின்றனர் இவைகளை பார்த்து மெய்சிலிர்த்து போனோம். அம்மையாரின் மறைவுக்கு பின்னும் பணி தொடர்ந்து செயல்பட்டு வருவதை பார்த்து தேவனுக்கு நன்றி செலுத்தினோம்.

<u>கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்</u>

1) டிசம்பர் மாதத்தில் முதல் சனிக்கிழமை பெண்கள் ஐக்கிய சங்கத்தின் கிறிஸ்துமஸ் கலை நிகழ்ச்சி நடைபெறும் அந்நாளில் சிறப்பு பாடல்கள் குருநாடகம் நடனம் மற்றும் சிறப்பு செய்தி சிறப்பான இரவு உணவு. இதில் அனைத்து பெண்களும் கலந்து கொள்வது மிகச் சிறப்பான கொண்டாட்டம் ஆகும்.

2) 2016-ல் கிறிஸ்துமஸ் விழாவினை கொண்டாட வருடந்தோறும் ஏதாவது அனாதை இல்லம் முதியோர் இல்லம் சென்று அவர்களுடன் உணவு உண்டு பரிசு பொருட்களை கொடுத்து வருவது வழக்கம்.

3) 2016-ல் டிசம்பர் 10ஆம் தேதி நீலகிரி மாவட்டம் பாடந்துறையில் உள்ள D.B.M மிஷனரி பணித்தளத்தின் மூலமாக இயங்கி வருகிற ஆதிவாசி இல்லத்திற்கு 15பேர் அடங்கிய குழு ஆயர் தலைவர் ஆகியோர் சென்று கலை நிகழ்ச்சி நடத்தி அவர்களோடு உணவு உண்டு பரிசுகளை வழங்கி வந்தோம்.

4) 2017-ல் 17பேர் அடங்கிய குழு சென்று நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் உள்ள D.B.M பணித்தளம் கிறிஸ்மஸ் கலை நிகழ்ச்சி நடத்தி பரிசு பொருட்களை வழங்கி அவர்களோடு மதிய உணவு உண்டு மகிழ்ந்து வந்தோம்.

தேவன் தாமே இப்பணி அநேக மக்களுக்கு ஆசிர்வாதமாக இருக்கவும் மிகவும் சிறப்பான பணிகளை தொடர்ந்து செயல்படவும் கிருபை செய்வாராக! தேவன் தாமே உங்கள் அனைவரையும் ஆசிர்வதிப்பாராக!

இப்படிக்கு

கிறிஸ்து இயேசுவின் உன்னத பணியில்

பெண்கள் ஐக்கிய சங்கம்

<u>குறிப்பு</u>

இதுவரை பெண்கள் ஐக்கிய சங்கத்தில் சேராத பெண்கள் 200ரூபாய் செலுத்தி மெம்பராகவும்.